
# அறிவு

பல்சுவை மாத சஞ்சிகை

✶✶✶ தை - மாசி 1989 ✶✶✶



ARIVOU (Knowledge) விலை ரூ. 4 - 50

# அறிவு

தை - மாசி 1989

மலர்: 2 இதழ்: 1

உங்களுடன் ஒரு நிமிடம் ...............

**உங்கள் கைகளில் தவழும் இந்த அறிவு ஒரு மறுபிறப்பு.**

நாம் கூட நம்பிக்கை இழந்து இருந்தோம். இது மீண்டும் வெளிவரும் என்பதில்.

இதற்கு நாமெல்லோரும் கடமைப்பட்டுள்ளோம் - அறிவு வாசகர் வட்டத்தில் ஆண்டுச் சந்தா செலுத்திச் சேர்ந்த அன்பர்களுக்கு.

அவர்களுக்கு என்ன பதில் சொல்வது? என்ன சமாதானம் சொல்வதென்று தெரியாததினால் தாமதித்தாலும் அறிவை வெளியிடுவதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

அவர்களுக்கு நன்றி கூறி, அறிவு வாசகர் வட்டம்வளர்ந்தால் அறிவு இடையூறின்றி தொடரும் என்பதை உங்கள் கவனத்திற்கு வைக்கிறோம்.

**வணக்கம்**

- ஆசிரியர் -

# யோகர் சுவாமிகள்

## போற்றிய மகாவாக்கியங்கள்

**★ அட்டைப்பட கட்டுரை**

'ஒரு பொல்லாப்புமில்லை'
'எப்பவோ முடிந்தகாரியம்'
'நாம் அறியோம்'
'முழுதும் உண்மை'

நான்கு மகாவாக்கியங்கள் இவை. சகல சாஸ்திரங்களினதும் சாரங்கள் அனைத்தையும் இந்த மகாவாக்கியங்கள் உள்ளடக்கியிருக்கின்றன. வேதாந்தமோ, சித்தாந்தமோ எதன் வழியில் இந்த வாக்கியங்களுக்கு அர்த்தம் கூறினாலும் — அந்த வழியைப் பூரணமாக வெளிப்படுத்தும் கூற்றுகளாக இந்த மகாவாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. இதுவே இவ் வாக்கியங்களின் தனிச்சிறப்பு.

'சர்வம் பிரமமயம்'–இதுவேதாந்தசாரம். சர்வமும் பிரமமயம் என்றால் இங்கு என்ன பொல்லாப்பு நிகழமுடியும்? ஆதலால் ஒரு பொல்லாப்புமே இல்லை.

நீ அன்றும் இன்றும் பரிபூரண சச்சிதானந்த சொரூபியாய் இருந்திருக்கின்றாய். ஆதலால் நீ என்றும் பூரணமானவன். உன் பூரணத்துவம் எப்பவோ முடிந்த காரியம்.

அப்படி உள்ள காரியம் — பிரமம். அது சிந்தனை இறந்தது — சிந்தனை தீபம் — அதனை நாம் அறியோம்.

அனைத்தும் சத்தாய் இருப்பதால் முழுதும் உண்மை. — இது வேதாந்த விளக்கம்.

எல்லாம் சிவமயம் — இது சித்தாந்தம். எங்கும் சிவன் இருக்க சீவனுக்கு பொல்லாப்பு ஏது? ஆதலால் ஒரு பொல்லாப்பு மில்லை.

சிவ சொரூபத்தைச் சிந்தித்துச் சிந்தித்து சிவனிலே ஐக்கியமாவதே சீவன் முக்தி. சிவனுடன் கலப்பதே இறுதி என்பது எப்பவோ முடிந்த காரியம். மாயையில் கட்டுண்டு கிடப்பதால் அதனை நாம் அறியோம். ஆனால் எல்லாம் சிவன் என்பதோ முழுதும் உண்மை.

— நான்கு மகாவாக்கியங்களுக்கும் ஓர் அடியார் கூறிய விளக்கங்கள் இவை.

இந்த நான்கு மகாவாக்கியங்களையும் உலகுக்கு ஒப்புவித்து, உலகை உயர்வித்தவர் யோகர் சுவாமிகள். அவருக்கு அவரது ஞானகுருவான செல்லப்பா சுவாமிகள் உபதேசித்த மகாவாக்கியங்களே இவை.

வடமொழியில் கூறப்படும் 'தத்வம் அஸி', அகம் பிரம் அஸி' ஆகிய மகாவாக்கியங்களுக்கு ஒப்பானது இந்த நான்கு மகாவாக்கியங்களும் ஆகும்.

★★★

1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி மாவிட்டபுரத்தில் வர்த்தகர் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் யோகநாதன் பிறந்தார்.

சிறு வயதிலேயே தாயை இழந்த யோகநாதன், சிறிய தந்தையர் யோசப்பு என்பவரிடம் இருந்து கல்வி பயின்றார். மஸ்கெலியா வில் கடை வைத்திருந்த அவரது தந்தையர் யோகநாதனுடைய மேற்படிப்பைக் கவனிக்க இயலாததினால், யோகர் எட்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டார்.

தந்தையின் அழைப்பில் மலைநாடு சென்று வேலைசெய்து வந்த யோகநாதன் ஒருமுறை சிவனொளி பாதமலை சென்று சூரியன் உதிக்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். இயற்கை அழகில் மனதைப் பறிகொடுத்த இவர் தன் பாட்டிலேயே பேசத் தொடங்கினார். ''இது எல்லாம் உண்மை. எனது உடம்பு சிவன் சொத்து. சிவனுக்கே அது சொந்தம். அவனைத் தேடிப் போனேன்'' — என்றார். இந்த விபரீத எண்ணங்களைக் கண்ட தந்தையார் இவரை யாழ்ப்பாணத்திற்கே அனுப்பி வைத்தார்.

இதன் பின் அவர் தந்தையையும் இழந்தார். தமது 32 வயதில் நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்தார். செல்லப்பா சுவாமிகளின் பார்வை இவரைக் காந்தமெனக் கவர்ந்தது. அவர் வழியே போன யோகர் சுவாமிகள் ஒரு முழு ஞானியானார்.

கொழும்புத் துறையில் அன்பர் ஒருவர் கட்டிக் கொடுத்த குடிசையில் இருந்த யோகர் சுவாமிகளை நாள்தோறும் மக்கள் வந்து பார்க்கக் கூடுவார்கள். ஆன்மீக தாகம் கொண்டவர்களும், தங்கள் கஷ்டங்களைக் கூறி தீர்த்துக் கொள்வோரும், சுவாமிகளைச் சோதித்துப் பார்ப்போரும்கூட அவரிடம் வருவார்கள்.

சுவாமிகளும் தம்மை நாடி வந்தவர்களின் உள்ளப்பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதி கூறுவார்கள். சிலரைஏசியும்துரத்துவார். அதைப் பொருட்படுத்தாமல் தம்மை

மேலும் மேலும் நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்குவார்கள். அவர்களை ஏசுவதன் மூலம் அவர்கள் வினைகளைச் சுவாமி தொலைத்து விடுகிறார். இவ்வுண்மையை உணர்ந்த அடியார்கள் சுவாமிகளின் மறமயக் கருணையை நினைந்து நினைந்து ஆனந்த கண்ணீர் சொரிவார்கள்.

''எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு இனம்'' என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர்களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும். ''எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்: எல்லோரும் சமம்'' என்றும் கூறுவார்கள்.

''உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம்'' என்று அடிக்கடி கூறுவார்கள். ''இதனை உணராதவர்கள் கடவுளைத் தேடித்தேடி அலைகிறார்கள். கடவுளை அறிய வேண்டும் என்று கவலைப்படுபவர்கள் இல்லை. அவர்களுடைய கவலை எல்லாம் நிலையில்லாத பொருள்களைப் பற்றியனவாகவே இருக்கிறது'' என்று சொல்லுவார்

சுவாமிகள் ஒரு சமரச ஞானி. எல்லா மதங்களையும் மதித்தவர். சமயப் பூசல்களை அறவே வெறுத்தவர்.

அதனால் தான்அவர் போதித்த மகாவாக்கியங்கள் சித்தாந்தம், வேதாந்தம் ஆகிய எல்லாவகையிலும் விளக்கம் தரத்தக்க நடுநிலைக் கூற்றுக்களாக அமைந்திருக்கின்றன.

சித்தாந்தத்தைப் பேணியதில் அவர் ஒரு சித்தர். வேதத்தையும் போற்றியதால் அவர் ஒரு ஞானி.

சுமார் 92 ஆண்டுகள் எம்மத்தியில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் எமது மக்களுக்கு ஊட்டிய சமய உணர்வு ஒப்பற்றது.

உதவி:- ஆத்மஜோதி நா, முத்தையா அவர்கள் எழுதிய "ஈழத்துச் சித்தர்கள்' என்ற புத்தகம்.)

# ✯ கால ஓட்டத்தில் பரிணாமம் ✯

ஜீவராசிகள் ஒவ்வொன்றும் மிக எளிமையான தமது "மூதாதைகளிருந்து இயற்கையாக, படிப்படியான மாற்றங்கள் மூலம் தற்போதைய நிலைக்கு வந்திருக்கின்றன.'' — சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை இப்படிக் கூறுகிறது.

பரிணாம வளர்ச்சியானது மாற்றங்களினால் ஏற்படுகிறது.

ஆகவே இவ்வாறான பரிணாம முறைக்கு மாற்றமும், தேர்வும் தான் முக்கிய தேவைகளாகும்.

மனிதன் குறிப்பிட்ட சில செடிகளிலும், ஜீவராசிகளிலும் தனக்குத் தேவையான மாற்றங்களை செயற்கையாக ஏற்படுத்தி பரிணாம மாற்றத்தை ஏற்படுத்தும் கர்த்தாவாக இருக்கிறான்.

இயற்கையில் இந்த மாற்றங்களும் தேர்வுகளும் மிக மிக மெதுவாக நிகழ்கின்றன.

இப் பூவுலகில் உயிரினங்கள் 200 கோடி ஆண்டுகளுக்கு மேலாக இருந்திருக்கின்றன என்பதற்கு சான்றுகள் பலவுண்டு.

இப்போது உலகில் வாழும் ஜீவராசிகளும், தாவரவர்க்கங்களும் உலகில் முதலில் தோன்றிய உயிரினத்தில் இருந்து, அறுபடாத கோர்வையாக உயிர் வாழ்ந்து வந்தவற்றின் வழித்தோன்றல்களே.

இதற்குரிய சான்றுகளை இன்று கல்லாக மாறியிருக்கும் — உயிரினங்களின் புதை படிவச் சான்றுகளில் ( Fossil ) — இருந்து அறியலாம்.

புவியின் தொன்மை மிக்க சுவடுகளில் இருந்து வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இன உயிரினங்கள் வாழ்ந்து வந்திருக்கின்றன என்பது புலனாகுகின்றது. இதற்கான சான்றுகளை அகழ்வாராய்ச்சியின்போதும்இயற்கையின் வெளிப்படையாற் தெரியும் சில மலைப்பாறைகளின் அடுக்கங்களிலும் நாம் காணலாம்.

எனினும் தொடர்ச்சியான மாற்றங்கள், வளர்ச்சியின் விதங்கள் ஆகியவற்றை விளக்கும் தொடரான புதைபடிவங்கள் அறியப்படவில்லை.

என்றாலும் அறியப்பட்டவற்றை புரிந்து கொள்வதற்கு முதலில் நில இயல் அறிவு சிறிது தேவைப்படுகின்றது.

காலத்திற்குக் காலம் நிலத்தில் வெவ்வேறு வகைப் பாறைகள் படிவங்களாக அமுக்கப்பட்டு வந்ததால் நில அடுக்குகளைக்

கொண்டு அவற்றின் காலத்தை வகைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

நிலவகைப்படுத்தல் மூலம் நாம் அறிந்த அதிக தொன்மையான பாறை அடுக்குகளில் எந்த உயிரினமும் வாழ்ந்ததற்கான அடையாளங்களோ அறிகுறிகளோ இல்லை.

இந்த அடுக்குகள் உண்டான காலத்தை ''தொடக்க காலம்'' (Archeozoic Era) என்று அழைப்பார்கள். இதன் காலவரையறை பூமி உண்டான காலத்திலிருந்து ஆரம்பித்து, இற்றைக்கு இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பான காலம் வரை வருகிறது. இக் காலத்தில் ஒரு கல உயிரினங்கள் தோன்றியிருக்கக் கூடும். எனினும் அவற்றின் தடயங்கள் ஏதும் இப்போது இல்லை.

இருநூறு கோடியிலிருந்து 150 கோடி வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தை நிலவியலாளர் புரோட்டெநோ சோயிக் காலம் (Protenozoic) என்பர். இக்காலம் தான் கடலில் வாழும் மூல, முதுகெழும்பில்லா ஜீவராசிகள் தோன்றிப் பரந்து வாழ்ந்த காலமாகும்.

இக் காலத்தில் தான் பற்றீயாக்கள், அல்ஜி, புழுக்கள், கிரஸ்டேசியன் (Crustacean) என்பன தோன்றி வாழத் தொடங்கின. இதுவே அமெரிக்காவிலுள்ள கிரான்கனியோன் (Grandcanyon) என்னும் மலைச்சரிவு தோன்றிய காலமாகும்.

மூன்றுவதாக முதல் புவியியல் காலமான பலியோசோயிக் (Paleaozoic)யுகம். இது 55 கோடி வருடங்களில் இருந்து 22 கோடி வருடங்கள் வரையான காலம். இதை முதல், இடை, கடை பலியோசோயிக் காலங்களாகப் பிரிக்கலாம்.

இற்றைக்கு 55.3 கோடி வருடங்களுக்கு முன்பான காலத்திலிருந்து இற்றைக்கு 44.8 கோடி வருடங்கள் முன்பான காலம் வரையுள்ளது. காம்பிரியன் காலத் தொகுதி

இக் காலத் தொகுதியில் தான் அல்ஜி, மற்றும் முதுகெலும்பில்லாத பல பிராணிகள் இருந்தன.

> ''மனித இனத்தின் ஆதி மூதாதையர் ஆதாமும் ஏவாளுமா?'' என்ற கட்டுரைத் தொடரின் மற்றையதோர் அங்கம் இது.

இற்றைக்கு 44. 8 கோடி வருடங்கள் முன்பான காலத்திலிருந்து 38.1 கோடி வருடங்கள் முன்பான காலம் வரையுள்ள இடைப்பட்ட காலம் — ஓர்டோவிசியன் காலத் தொகுதி (Ordovician). இக்காலத்தில்தான் முதன் முதலில் முதுகெலும்புள்ள பிராணியான மீன்கள் தோன்றியிருக்கலாம். கடல் அல்ஜிகள் பரவலாக இருந்த காலம். கோரல்ஸ், நட்சத்திர மீன்கள், இரட்டைச் சிப்பிகள் கொண்ட மட்டிகள் உண்டாகி வாழ்ந்த காலம்.

இடைப் பலியோசிக் காலத்தைக் சிலூரியன் (Silurian) காலம் என்றும் டெவோனியன் (Devonian) காலம் என்றும் பிரித்துள்ளார்கள். இதில் சிலூரியன் காலம் இற்றைக்கு 38.1 கோடி வருடங்கள் முன்பான காலத்திலிருந்து 35.4 கோடி வருடங்கள் முன்பான காலம் வரையானது.

இக் காலத்தில் தான் முதன் முதலில் தரையில் வளரும் தாவர இனங்கள் உண்டாயின. முதன் முதலில் சுவாசிக்கும் ஜீவராசிகளான மீனும், தேனி வர்க்கங்களும் உண்டாயின.

இதையடுத்து இற்றைக்கு 35·4 கோடி வருடத்திலிருந்து 30.9 கோடி வரும் முன்பான இடைவெளிக் காலத்தை டெவோனியன் காலமென்பர். இக்காலத்தில் தரையில் வாழும் தாவர இனங்களும், நிலத்திலும், நீரிலும் வாழும் உயிரினங்களும், உண்டாயின. எனினும் இக் காலத்தில் பெரும்பான்மையாக உலகை ஆண்டவை கடலிலுள்ள மீன்களே.

கடைப்பலியோசிக் காலமான- இற்றைக்கு30·9கோடி வருடத்தில் இருந்து இற்றைக்கு 18·5 கோடி வருடங்கள்முன்பான வரையிலான காலத்தை- மிஸீஸிப்பியன் (Mississipian), பென்சில்வேனியன் (Pensylvenian), பேர்மியன் (Permians), ட்ரையாசிக் (Triassic) காலத் தொகுதிகளாக் பிரிந்துள்ளனர்.

இக் காலத் தொகுதிகளில் பழமையான ஊர்வனவும், பூச்சி வகைகளும் உண்டாகின. நிலக்கரி தோன்றிய காலமும் இதுவே. நிலத்தில் வாழும் முதுகெலும்புள்ள பிராணிகள் பலவும் தோன்றின.

ட்ரையாசிக் காலத் தொகுதியிலேயே முதலாவது பாலூட்டி விலங்குகள் தோன்றின. இக் கால கட்டத்தில் தான் இராட்சதப் பிராணிகளான டயனோசரஸ் போன்றவை பரவலாக வாழ்ந்தன. மிக பனியான காலமும் அதை அடுத்து வெப்பமான சூழலும் ஏற்பட்டதும் இக் காலத்திலேயே.

அடுத்த 12.5 கோடி வருட காலத்தினை மீசோசோயிக் (Mesozoic) காலம் என்பர். இதில் முதல் பகுதியை யுராசிக் காலம் (Juorassic) என்பர். இது இற்றைக்கு முன்பாக 18·5 கோடி வருடத்தில் இருந்து 15·7 கோடி வருடங்கள் வரையிலான காலத் தொகுதியாகும். முதன் முதலில் பூக்கும் தாவரங்கள் உண்டான காலம் இதுவே.

மேலும் இக்காலத்தில் தான் இராட்சத டயனோசரஸ், பூச்சிகள் பல்கிப் பெருகின. பறக்கும் ஊர்வனவும், பறவைகளும் தோன்றின. கண்டங்களுக்கிடையில்

இருக்கும் சமுத்திரக் கடல்கள் உண்டாயின. இதனால் சூழல் வெதுவெதுப்பாக இருந்தது.

கிரேட்டேசியாக் (Creatasea) கால ஆரம்பத்தில் இராட்சத ஊர்வன அழிந்தன. சூழல் மிகவும் உஷ்ணமாக இருந்தது. இற்றைக்கு முன்பாக 15·7 கோடி வருடத்தில் இருந்து 12·5 கோடி வருடங்கள் வரையிலான இக் காலத்தில் பூக்கும் செடிகள் பல்கிப் பெருகின. மூத்த பாலூட்டிகள் பெருக ஆரம்பித்தன. ரொக்கிஸ், அந்தீஸ் மலைத்தொடர்கள் தோன்றின. வடஅமெரிக்க சமுத்திரங்கள் தோன்றின. ஐரோப்பாவின் சீதோஷ்ண நிலை மாறிய வண்ணமிருந்தது.

இதற்கடுத்த இற்றைக்கு 6 கோடி வருடங்கள் முன்பான காலத்தைசீனோசோயிக்(Cenozoic) கலாத் தொகுதி என்பர். இதன் முதற் பகுதியான இயோசின் (Eocene) காலத்தில் தற்கால பூக்கும் தாவரங்கள் காடுகள், தற்கால பாலூட்டிகள் பறவைகள் தோன்றின.

ஒலிகோசீன் காலத்தில் தான் முதன் முதல் மனிதக் குரங்குகள் தோன்றின. இதற்கடுத்த மயோசீன் காலத்தில் பாலூட்டிகள் முதிர்ச்சி அடைந்தன. அதற்கடுத்த பிளையோசின் காலத்திலே தான் மனிதன் தோன்றினன்.

கடைசியாக உள்ள 20 இலட்சம் ஆண்டுகளில் முந்திய காலத்தை பிளையோசின் காலத்தொகுதி எனவும், பிந்திய காலத் தொகுதியை தற்காலம் எனவும் நில இயலாளர் கூறுவர்

தற்காலத்தில் தான் நாகரீக மனிதன் தோன்றினன்.

எமது முதற் கட்டுரையில் 30 இலட்சத்துக்கு முன் வாழ்ந்த ஒரு பெண்ணின் எலும்புக் கூட்டை, 1974ம் ஆண்டு எதியோப்பியா பாலை வனத்தில் கண்டு பிடித்ததாகவும் அந்த எலும்புக் கூட்டிற்குரியவளுக்கு லூசி எனப் பெயரிட்டனர் என்றும் அறிந்தோம்.

அடுத்த கட்டுரையில் மனிதக் குரங்குகளில் இருந்து வளர்ந்து வந்த மனித இனங்களைப் பற்றி ஆராய்வோம்.

# அறிவு வாசகர் வட்டம்

1. சிவயோக சமாஜம். 68, பிரதானவீதி, திருகோணமலை.
2. ஜனுப் எம். பி. எம். ஜலீல், இலங்கை வங்கி வட்ட முகாமையாளர், திருகோணமலை
3. திரு. த. விமலநாதன் 39/1, கல்லூரிவீதி, திருகோணமலை
4. திரு. ச. தா. குணச்சந்திரன், ஜுரோங் கிழக்கு, சிங்கப்பூர்.
5. திரு. ச. அருள்ஜோதிச்சந்திரன், லண்டன்.
6. திரு. எம். ராஜ்குமார்
7. ஜனும் எம், ரஹீம்
8. எம். கிருஷ்ணனந்தன்
9. ஆர். வி. விஜயரட்ணம்
10. திருமதி. எம். ரத்னசோதி
11. திரு. விக்னேஸ்வரன்
12. செல்வி. ஜரீன் பீட்டர்ன்
13. திரு. தனபாலசிங்கம்
14. ஜனுப் ஏ. ரகுமான்

(6–14: இலங்கை வங்கி மாவட்ட காரியாலயம் திருகோணமலை)

15. திரு. கே. எஸ். சிவசுப்பிரமணியம், பிரதானவீதி, திருகோணமலை.
16. ஆர். ரவிச்சந்திரமோகன், வித்தியாலயம் ஒழுங்கை, திருகோணமலை.
17. சுவாமி தந்திரதேவா, உவர்மலை, திருகோணமலை.
18. திரு. எஸ். வி. ஆனந்தராசா, ஷரோனு, சவூதிஅரேபியா.
19. திரு. ஏ. ஞானதாசன் W. A. சில்வாமாவத்த, கொழும்பு -6
20. திரு. வி. என். சிவராஜா குணசிங்கபுர கொழும்பு – 12
21. திரு. எஸ். ஆர். துரைராஜா 36, சாகர ரோட் கொழும்பு -4
22. திரு. என். தயாபரன் ஷார்ஜா ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
23. திரு. கே. கே. சுப்பிரமணியம், ரத்னகார பிளேஸ், தெகிவளை.

**சந்தாவிபரம்:-**

ஆண்டு சந்தா ரூபாய் 45/–

வெளிநாடுகளுக்கு தபால் செலவு தனி.

## கவிஞனின் அனுபவம்

### அது ஒரு தனிரகம்

— ஜோதி —

(கவிஞன் ஒருவன் மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை காகித ஆலைக்கு ரெயிலில் செல்லுகையில் ஏற்பட்ட அனுபவத்தை இக் கவிதையில் தருகின்றான்)

கடகட எனவொரு இசைபட வருகிற
ரெயிலினி லனுதின மிடர்பல படுகிற
கவிஞனி னனுபவ மிகைபட மிகைபட
தினமொரு காவிய மனதினி லமைவுற
வதைபடு வார்த்தையின் பிரசவ வேதனை
அதையொரு காகித மிசைபட இயம்பிட
பலரதை ஒருமுறை புகழுரை நயம்பட
உரைத்திட உணர்வது தாய்மையி னின்பம்.

படபட எனபல வுரைபல உரைத்திடு
மடமயில் மங்கையர் குரல்பல இணைந்திட
கடகட ரெயிலொலி காற்றினி லோய்ந்திட
இடையிடை கூவிடும் இஞ்சினி னொலியது
தொலைவினி லொருரெயில் வருவது போலவே
செவியினி(ல்) விழுவதால் தலையினை அடிக்கடி
வெளியினி(ல்) விடுவதால் விழியினில் விழுவது
கரித்திட வருவது கண்களில் கண்ணீர்

ஒருகர மதிற்சில பொருள்பல இருந்திட
மறுகர மதுவொரு துணையெனு மளவிலே
அகப்படு பொருளினை குரங்கென பிடித்திட
பரபர வெனவொரு துருதுருப் புடன்ரெயில்
புறப்படு வேளையில் நாணலாய் வளைவரேல்
சடசட வெனவொரு சரிவது காண்கிலர்.
முதலதைப் பயின்றிட லவசிய ''மரிவரி''
முழுவதும் பயின்றவ(ர்) ரதிசயம் சரிவரின்.

பலபல நிறங்களின் பாவையர் சேலை
பலவித வகையினிற் பார்ப்பவர் சேட்டை
தினமிதைப் பொறுத்திட செல்வதோ ஆலை
இடையிடை நினைத்திட செய்வதே வேலை
ஒருபடி ஓய்ந்திட வந்திடு மாலை
மறுபடி தொடர்ந்திடு மதுதான் வாழ்க்கை
அதையிதைச் சொன்னதால் ஆத்திரம் வேண்டாம்
அடுத்தவர் சுதந்திரம் காத்திட வேண்டும்.

கடகட எனவொரு இசையொடு போகிற,
ரெயிலினி லனுதின மிடர்பட சாகிற,
கவிஞ்னி னனுபவ மதுவொரு தனிரகம்.

## வாசகநேயர்களுக்கு. . . .

நீங்கள் வாசிக்கும் விடயங்களில் தரமானவை, ருசிகரமானவை, பிறருடன் பகிர்ந்து அனுபவிக்க வேண்டியவை என எவற்றை யாவது நினைத்தால் அவற்றைப் பிரதி பண்ணி, எந்த சஞ்சிகை/புத்தகத்தில் வந்தது, யாரால் எழுதப்பட்டது போன்ற விவரங்களுடன் அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரிக்கப் படும்.

அதேசமயம் உங்கள் சுய ஆக்கங்களை அறிவில் பிரசுரிப்பதையே நாம் அதிகம் வரவேற்கின்றோம்.

விடயங்களை அனுப்ப வேண்டிய விலாசம்:-

ஆசிரியர்,
'அறிவு'
29, சிவன் வீதி,
திருகோணமலை.

## மார்பு அடைப்பு என்றால் என்ன?

★ இருதயம் உடலுக்கு வேண்டிய இரத்தத்தினை வழங்கும் வங்கியாக தொழிற் படுகின்றது.

★ ''கொறனறி நாடிகள்'' இருதய தசைகளுக்கு இரத்த விநியோகத்தினை செய்கின்றன.

★ இக் ''கொறனறி நாடிகளில்'' கொலஸ்ரேஸ் படிவுகள் ஏற்பட்டு அதன் உட் சுவர்கள் தடிப்படைகின்றன.

★ இதனால் இதயத் தசைகளுக்குப் போகும் இரத்த விநியோகத்தில் தடையோ, குறைவோ ஏற்படுகின்றது.

★ இப்படி இதயத்தசையில் பாதிப்பு ஏற்படும் போது இடப்பக்க நெஞ்சின்மேல் தாங்க முடியாத வலி தோன்றும். அந்த வலி சில சமயம் அப்பக்கம் – கழுத்திற்கோ கைக்கோ பரவும், வாந்தியும், அதிக வியர்வையும் இருக்கும். சிலரில் நெஞ்சு நோ ஏற்படாமல் மார்பு அடைப்பு ஏற்படலாம்.

★ போதிய போஷாக்கின்மையால், இதயத்தின் வேலை பாதிப்படைவதுடன் அழிவுற்ற இதயத் தசைச் சுவர்களில் ஓட்டையும் விழலாம். இதன் வழியாக இரத்தம் வெளியே பீறலாம். இந்நிலையில் நோயாளி மரணம் அடைகின்றார்.

★ நெஞ்சுவலி, வாந்தி, களைப்பு, மயக்கம், வியர்வை போன்ற அறிகுறிகள் தென்பட்டவுடன், நோயாளியை உடன் வைத்தியமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் அல்லது வைத்தியரை வீட்டிற்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்வதே சிறந்தது.

★ அப்படியான வசதிகிட்டாத போது, இப்படியான நோயாளர்களை முன்கூறிய அறிகுறிகள் தென்பட்டவுடன், மிகப் பாதுகாப்பாக, எதுவித உடல் அசை வாட்டங்களையும் தவிர்த்த நிலையில், மருத்துவ மனைக்கு எடுத்து வரவேண்டும் அவ்வேளை இதயத்தின் தொழிற்பாடு மந்தமடைகின்றதென அவதானிப்பின் இடநெஞ்சின், இதயமேற்பாகத்தில் முதலுதவி புரிவோர் கையினை வைத்து அழுத்தி நிமிடத்திற்கு 40 – 60 தடவைகள் இதயத்தை செயற்கையாக இயங்க வைத்துக்கொண்டு, உடன் மருத்துவமனைக்கு விரைய வேண்டும்.

# கட்டிலிலிருந்து அண்டம் வரை....

— ராமர் —

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள்.

கட்டிலில் இருந்தபடியே குழந்தைகளுடன் அளவளாவிக் கொண்டிருந்த அப்பா புதிய விளையாட்டு ஒன்றை ஆரம்பித்தார்.

'நாம் எங்கே இருக்கின்றோம்?' — இது அப்பாவின் கேள்வி.

'நாங்கள் கட்டிலில் இருக்கின்றோம்' — குழந்தைகள் பதில் அளித்தனர்.

'கட்டில் எங்கே இருக்கிறது?'
'நம் வீட்டில்!'
'நம் வீடு எங்கே?'

'திருகோணமலை பிரதான வீதியில்!'

'திருகோணமலை எங்கே இருக்கிறது?'
'இலங்கையில்!'
'இலங்கை?'

'ஆசியாக் கண்டத்தில்!' — சளைக்காமல் பதிலிறுத்தனர் குழந்தைகள்.

'ஆசியாக் கண்டம் எங்கே இருக்கிறது?' — அப்பாவும் விடவில்லை.

'பூமியில்!' — என்றனர் குழந்தைகள்.
'பூமி எங்கே இருக்கிறது?'
'சூரிய மண்டலத் தில்!' —

'சூரியமண்டலம் எங்கிருக்கிறது?' அப்பாவின் கேள்வி தொடர்ந்தது. பிள்ளைகளுக்குப் பதில் தெரியவில்லை. அப்பா விளக்கமளிக்க ஆரம்பித்தார்.

எமது சூரிய மண்டலம் பரந்த ஆகாய கங்கையில் — கலக்ஸி மண்டலத்தில் — ஒரு சராசரி நட்சத்திரமே!

சூரியனைச் சுற்றி எமது பூமியைப் போல ஒன்பது கிரகங்கள் இருக்கின்றன என்று அப்பா கூறு முன்னரே 'நவக்கிரகங்கள்தானே' என்று முந்திக்கொண்டு கூறினான் மூத்தவன்.

'சாஸ்திரங்களில் கூறும் நவக்கிரகங்கள் அல்ல அவை' என்று கூறிய அப்பா தமது விளக்கத்தைத் தொடர்ந்தார்.

சாஸ்திரத்தில் நாம் சூரியன், சந்திரன், புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, ராகு, கேது ஆகியவற்றை நவக்கிரகங்கள் என்கிறோம்.

உண்மையில் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்தும் மட்டுமே கிரகங்கள். சூரியன் கிரகம் அல்ல. அது ஒரு நட்சத்திரம். சுய ஒளி வீசும் நெருப்பு வாயுப் பந்து. கிரகங்கள் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் இறுகிய கோள்கள்.

வானில் இரவில் நாம் காணும் இரண்டாயிரத்திற்கு அதிகமான

ஒளிப் புள்ளிகள் அனைத்திலும் எமது கண்ணுக்குத் தெரியும் கிரகங்கள் இந்த ஐந்துமே.


அதிலும் புதன் கிரகம் மிகச் சிறியது. அது சூரியனுக்கு மிகவும் சமீபமாக இருப்பதால் அதை அவதானிப்பதும் கஷ்டமானதாகும்.

சூரியனிலிருந்து அடுத்து இருக்கும் வெள்ளி அதிகாலையிலும் மாலையிலும் பிரகாசமாகத் தெரியும். காலையில் தெரியும்போது இதைக் காலை வெள்ளி என்பர். மாலையில் காட்சி தரும்போது மாலை வெள்ளி என்பர்.

சூரியனிலிருந்து நான்காவதாக இருப்பது செவ்வாய்க் கிரகம். பூமியை விடச்சிறிதளவு சிறிதான செவ்வாய் சிவப்பு நிற ஒளிப்புள்ளியாகக் காட்சி தருகின்றது.

அடுத்து இருக்கும் வியாழன் தான் சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கிரகம். அது பூமிக்கு தூரத்தில் இருப்பதால் பிரகாசமான ஒரு விண்மீன் போல் காட்சி தருகிறது. பூமிக்கு ஒரு சந்திரன் இருப்பதுபோல் வியாழனுக்கு 12 சந்திரன்கள் உண்டு.

அடுத்து இருக்கும் சனி வியாழனை விடச் சிறிதளவு சிறியது. சனிக்



வெள்ளிக்கு அடுத்தது எமது பூமி. பூமியும் ஒரு கிரகமே. பூமியை நாம் செவ்வாயிலிருந்து பார்ப்போமானால் அது பிரகாசமான ஒரு நட்சத்திரமாகத் தெரியும் ஆனால் சந்திரனில் இருந்து பார்க்கும்போது சந்திரனைவிட ஒளி பொருந்திய பெரிய சந்திரன் போல் தெரியும்.

கிரகத்தைச் சுற்றி மூன்று வளையங்கள் உள்ளன. இவற்றைச் சக்திவாய்ந்த தொலைநோக்கிகள் மூலம் பார்க்கும்போது அவை அழகாகத் தோன்றும். சனிக்கிரகத்திற்கு மூன்று வளையங்களுடன் நாலு சந்திரன்களும் உள்ளன.

வானசாஸ்திரிகள் வானை ஒவ்வொருநாளும் அவதானித்து வந்தபோது சில ஒளிப்புள்ளிகள் சிறிதுசிறிதாக இடம்பெயர்ந்து செல்வதைக் கவனித்தனர். இந்த ஒளிப்புள்ளிகளை 'அலையும் விண்மீன்' என்று கிரேக்க விஞ்ஞானிகள் தமது கிரேக்கமொழியில் கூறினர்கள். அவையே இப்போது ஆங்கிலத்தில் 'பிளானெட்டு' (Planets) என்று கூறப்படுகின்றன.

நீங்களும் வானத்தை ஒவ்வொருநாளும் கவனித்துவந்தால் இந்த அலையும் ஒளிப்புள்ளிகளான கிரகங்களைக் கவனிக்கக் கூடியதாக இருக்கும். அதோடு மின்னிமின்னி ஒளிரும் விண்மீன்களிலிருந்து மின்னிமின்னி ஒளிராமல் ஒரேயளவு பிரகாசமாய் ஒளிர்ந்துகொண்டிருக்கும் நட்சத்திரங்களிலிருந்து இந்தக் கிரகங்களைப் பிரித்தறியக் கூடியதாகவும் இருக்கும்.

வானத்தை ஒவ்வொருநாளும் பார்த்துவந்தால் கூட்டம் கூட்டமாகத் தெரியும் விண்மீன்கள் அனைத்தும் ஒவ்வொருநாளும் அதே நேரத்தில் ஒரு சிறிதளவு தள்ளிப்போயிருப்பதை அவதானிக்கலாம் ஒருவருடத்தில் ஒரு முழுச்சுற்றுவரும் இந் நட்சத்திரக்கூட்டங்கள் ஒரு நாளில் ஒரு பாகை வீதம் மேற்குநோக்கி முன்னேறிச் செல்வதைக் காணலாம்.

## ராசி மண்டலம்

வானில் – சூரியன் போகும் பாதையை சோடியாக் (Zodiac) என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். தமிழில் ராசிமண்டலம் என அழைக்கப்படும் இச்சூரிய பாதை 12 பகுதிகளாக, ராசிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த 12 பகுதிகளில் காணப்படும் விண்மீன்கள் கூட்டம் எந்த உருவத்தைப்போல் தென்படுகிறதோ அந்த உருவத்தின் (அநேகமாக மிருகங்களின்) பெயர்கள் கொடுத்துள்ளனர்.

இரண்டாவது ராசியான ரிஷபம் – காளையின் கொம்புகளை– ஆங்கில எழுத்து 'V' வடிவத்தைக் கொண்டதாக இருக்கின்றது.

12 ராசிகளிலும் சூரியன் நிற்கும் காலமே 12 மாதங்கள்.

சித்திரை மாதத்தில் முதலாவது ராசி மண்டலமான ஆடு உருவம் கொண்ட மேடராசியில் சஞ்சரிக்கும் சூரியன் —

காளை உருவம் கொண்ட ரிஷப ராசியில் வைகாசியிலும் —

இரட்டையர் ராசியான மிதுனத்தில் ஆனியிலும் சஞ்சரிக்கும்.

சூரியன் உதயமாகும் போது சூரியன் இருக்கும் ராசியும் உதயமாகிறது. இதனாலேயே சாஸ்திரத்தில்காலையில் பிறந்தகுழந்தைக்கு அதேராசி உதயலக்கினம் என்பர்; சூரியன் நடுமதியம் உச்சிக்கு வரும்போது பிறக்கும் பிள்ளைக்கு சூரியன் பத்தாம் வீட்டில் என்பர்; சூரியன் அஸ்தமிக்கும் போது பிறக்கும் பிள்ளைக்குச் சூரியன் ஏழாம் வீட்டில் என்பர்; அப்போது சூரியனிலிருந்து ஏழாம் வீடு உதயமாகிக் கொண்டிருக்கும். இதை உதயலக்கினம் என்பர்.

அடுத்து சந்திரனைப் பற்றிக் கவனிப்போம்.

சந்திரன் பூமியின் உபகிரகம். சந்திரன் சூரியனுக்கு அடுத்ததாக வானிலே காணப்படும்

இரண்டாவது பிரகாசமான பொருள், சந்திரன் ஏனைய கிரகங்களைப்போல் ஒளிப்புள்ளியாகத் தோற்றமளிக்காமல் பெரிதாகத் தட்டுப்போல் தென்படுவதற்குக் காரணம் அது நமக்கு மிக மிக அருகில் இருப்பதேயாகும்.

பூமியில் இருந்து சந்திரன் சராசரியாக 235,000 மைல் தொலைவில் இருக்கிறது.

இதற்கு அடுத்ததாக மிக அண்மையில் இருக்கும் செவ்வாய்க்கிரகம் சந்திரனைப்போல் தோற்றமளிக்காது ஒளிப்புள்ளியாக விண்மீன் போலத் தோற்றமளிப்பதன் காரணம் அதன் தூரமும் அதன் அளவுமேயாகும். செவ்வாய் சுமார் மூன்று கோடி மைல் தொலைவில் அதாவது சந்திரனின் தூரத்தைப்போல் 12 மடங்கு தொலைவிலுள்ளது. அது சந்திரனை விட இரண்டு மடங்கு பெரியதானாலும், அளவில் பூமியை விட அது சிறியதே!

சந்திரன் பூமியில் உபகிரகமாக இருந்தாலும் அதையும் ஒரு கிரகமாகவே சோதிடர்கள் கணித்தார்கள். பூமியில் சந்திரனின் ஆதிக்கம் சூரியனுக்கு அடுத்ததாகஉள்ளதற்குக் காரணம் அதன் அண்மித்த இருப்பிடமே;

சந்திரன் ராசிமண்டலத்தைச் சுற்றிவர எடுக்கும் நாட்கள் 27. ஒருமாதத்தில் சந்திரன் நிற்கும் இந்த 27 இடங்களும்தான் 'நட்சத்திரங்கள்' என சோதிடத்தில் குறிப்பிடப்படுகின்றன.

ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பகுதிகளாக - பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 27 நட்சத்திரங்களும் 108 பாதங்களுடையன. இவற்றில் 9 பாதங்கள் ஒவ்வொரு ராசியிலுமாக 12 ராசிகளிலும் இருக்கின்றன.

சந்திரன் ஒரு அமாவாசையில் இருந்து பௌர்ணமி வரை வளர்ந்துவருகிறது. இதைச் சுக்கிலபட்சம் என்பார்கள். பௌர்ணமியில் இருந்து மறு அமாவாசை வரை சந்திரன் தேய்ந்துபோகும். இதனை - கிருஷ்ணபட்சம் என்பார்கள்.

ஓர் அமாவாசையில் இருந்து மறு அமாவாசைவரை எடுக்கும் காலப்பகுதியே ஒரு மாதம் எனப்படும். வளர்பிறை திதி பதினைந்தும் தேய்பிறைத் திதி பதினைந்துமாகச் சேர்ந்து ஒருமாதமாகும்.

## ராகு கேதுக்கள்

ராகும் கேதுவும் கிரகங்களே அல்ல. அவை பூமியின் நிழல் முடியும் புள்ளியும் அதற்குச் சரியாக எதிரே 180 பாகையில் அமைந்துள்ள புள்ளியுமேயாகும், சாஸ்திரங்களில் கூட இவற்றைச் சாயக் கிரகங்கள் என்றே அழைப்பார்கள். இந்த நிழல் புள்ளிக்குள் சந்திரன் வந்தால் சந்திரகிரகணம் உண்டாகிறது. இந்தப் புள்ளிக்கு சரியாக 180 பாகையில் சூரியன் நிற்கும் போது இடையில் சந்திரன் வந்தால் சூரிய கிரகணம் உண்டாகின்றது.

ஆகவே உண்மையான நவக்கிரகங்களில் எஞ்சிய மூன்றுன யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகியவையுடன் எமது பூமியும் சேர்ந்துதான் நவீன நவக்கிரகங்கள் ஆகின்றன.

சூரிய மண்டலம் ஆகாயகங்கை எனும் பால்வெளி மண்டலத்தில் இருக்கிறது. பால்வெளி மண்டலமோ எமது அயல் மண்டலம் என்று அழைக்கப்படும் Local group of Galaxies சைச் சேர்ந்தது. இந்த வட்டத்தில்தான் அண்ட்ரோமெடா கலக்ஸி இருக்கிறது. எமது பால்வெளி மண்டலத்தின் விட்டமோ 100 000 ஒளிஆண்டுகள்· அண்ட்ரோமெடா கலக்ஸி 2000 000 ஒளி ஆண்டு தொலைவிலுள்ளது, இந்த அயல் மண்டலக்கூட்டத்தைப்போல் பல கூட்டங்களைக் கொண்டதே இந்த அண்டம்.

ஆகவே நாம் மீண்டும் கட்டிலில் இருந்து ஆரம்பிப்போமா என்று கேட்டு விட்டு ஆட்டத்தைத் தந்தை ஆரம்பித்தார். குழந்தைகள் தடங்கலின்றிப் பதில்களைப் பட்பட் என்று கூறினார்கள்.

| | |
|---|---|
| நாம் எங்கிருக்கிறோம்? | கட்டிலில்! |
| கட்டில் எங்கிருக்கிறது? | வீட்டில்! |
| வீடு? | பிரதானவீதி, திருமலையில்! |
| திருகோணமலை? | இலங்கையில்! |
| இலங்கை? | ஆசியாக் கண்டத்தில்! |
| ஆசிய கண்டம்? | உலகத்தில் - பூமியில்! |
| பூமி? | சூரிய மண்டலத்தில்! |
| சூரிய மண்டலம்? | ஆகாய கங்கை கலக்ஸியில்! |
| ஆகாயகங்கை (பால்வெளி) கலக்ஸி? | அயல் மண்டலக்கூட்டத்தில்! |
| அயல் மண்டலக் கூட்டம்? | அண்டத்தில்! |

இந்த மனப் (பரவெளிப்) பிரயாணத்தினால் ஆறடிக் கட்டிலில் இருந்து அண்டத்தைச் சில கணநேரத்தில் அடைந்துவிட்டோம் அல்லவா?' —அப்பா கேட்டார். ★

| இல. | ராசி மண்டலம் | ZODIAC | ராசிகளின் தோற்றம் |
|---|---|---|---|
| 1 | மேடம் | ARIES | ஆடு |
| 2 | இடபம் | TAURUS | காளை (மாடு) |
| 3 | மிதுனம் | GEMINI | இரட்டையர் |
| 4 | கடகம் | CANCER | நண்டு |
| 5 | சிங்கம் | LEO | சிங்கம் |
| 6 | கன்னி | VIRGO | பெண் |
| 7 | துலாம் | LIBRA | தராசு |
| 8 | விருச்சிகம் | SCORPIO | தேள் |
| 9 | தனு | SAGITARIUS | வில் |
| 10 | மகரம் | CAPRICORN | மகரமீன் |
| 11 | கும்பம் | AQUARIS | குடம் |
| 12 | மீனம் | PISCES | மீன்கள் |

# சாம, பேத, தான, தண்டம்

ஒரு காட்டில் ஒருயானை இறந்து கிடந்தது. அந்தப்பக்கமாக வந்த ஒரு நரி அதைக் கண்டது. அதன் இறைச்சியைத் தின்பதற்கெண்ணி அதன் அருகில் சென்றது. அப்போது அங்கு சிங்கம்வந்து சேர்ந்தது.

நரியைக் கண்டு, 'நீ யார்?' என்று அதட்டியது சிங்கம்.

அரசே, தாங்கள் கொன்று போட்ட இந்த யானையைக் காத்துக்கொண்டு நான் இருக்கிறேன்', என்றது நரி.

நரி அடக்க ஒடுக்கமாகவும் சமாதானமாகவும் பேசியதைக்கண்ட சிங்கம், அதன் பேரில் இரக்கப்பட்டு, 'நரியே, இது நான் கொன்ற யானை அல்ல. ஆகவே நீயே அதை எடுத்துக்கொள்' என்று சொல்லிச்சென்றுவிட்டது.

சிங்கம் சென்ற சிறிது நேரத்தில் அங்கு ஒரு புலி வந்துசேர்ந்தது. அது நரியைப்பார்த்து, 'நீ யார்? என்ன செய்துகொண்டு இருக்கிறாய்? என்று அதிகாரக் குரலில் கேட்டது.

'புலிமாமா, இதை ஒரு சிங்கம் கொன்றுபோட்டது: அந்தச் சிங்கம் இந்தப்பக்கத்தில்தான் எங்கோ ஒளிந்துகொண்டிருக்கிறது. ஏதாவது புலி வந்தால் எனக்குச்சொல் என்று அந்தச்சிங்கம் சொல்லியிருக்கிறது. ஏன் என்று கேட்டேன். அதற்கு அந்தச் சிங்கம், 'முன்னொரு யானையை நான் கொன்று போட்டுவிட்டு நீராடப் போயிருந்தபோது, ஒரு புலி வந்து அந்த யானையைக் கடித்துத் தின்று எச்சிலாக்கிவிட்டது. ஆகவே புலியை அதற்குத் தண்டிக்கவேண்டும், என்று சொல்லியது'.

இவ்வாறு நரி சொல்லிக்கொண்டிருக்கும்போதே புலி தப்பித்தேன் பிழைத்தேன் என்று அங்கிருந்து ஓடிவிட்டது.

இவ்வாறு பகையுணர்ச்சியினால் புலியை மாறுபடச்செய்து ஓட்டியபின்னர் அங்கு ஓர் குரங்கு வந்தது.

'வா, வா இவ்வளவு பெரிய யானை இறந்து கிடக்கிறது. தின்ன ஆளில்லையே என்றுதான் பார்த்துக்கொண்டிருந்தேன் இதன் உடலைக் கிழித்து வேண்டிய அளவு தின்னு' என்று கூறியது நரி.

**சிறுவர் உலகம்**

குரங்கு சரி என்று கூர்மையான தன் கை நகத்தால் யானையின் உடலைக் கிழித்தது. அது கிழித்து முடிந்த சமயம்; 'ஐயோ சிங்கம்! சிங்கம்! அதோ வருகிறது!' என்று நரி கூச்சலிட்டது. சிங்கம் என்றவுடன் பயந்துபோய்க் குரங்கு ஓட்டம்பிடித்தது.

'அப்பாடா! இந்த யானையின் தடித்த தோலை எப்படிக் கிழிப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். தானம் கொடுப்பதுபோல் காட்டிக் குரங்கை ஏமாற்றிக் கிழித்தாயிற்று. தின்ன வேண்டியதுதான்' என்று நரி யானையைத் தின்னப்போகும்பொழுது அங்கு மற்றொரு நரி வந்துசேர்ந்தது.

உடனே அந்த நரியின்மேல் பாய்ந்து சண்டையிட்டு அடித்து

——→

# இதய மாற்றுச் சிகிச்சை!

'உன் இதயத்தை என்னிடம் தா'

'அவரிடம் என் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டேன்'

'என் இதயம் அவர் பின்னால் சென்று விட்டது'

இப்படி எல்லாம் காதலர்கள் கற்பனையாகப் பேசுவதை இலக்கியங்களில் கண்டிருக்கிறோம்,

ஆனால் இன்றைக்கு ஒருவரது இதயத்தையும் நுரையீரலையும் கூட அப்படியே இரத்தக்குழாய்களுடன் அறுவைச்சிகிச்சை செய்து எடுத்து, இன்னொருவரின் மார்புக் கூட்டில் பொருத்தி விடுவது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

இதனாலேயே இது ஒரு சாமானிய அறுவைதான் என்ற முடிவுக்கு யாரும் வந்து விட வேண்டாம். மிகச் சிக்கலான, சிரமமான, உயிர்ப் போராட்டமான முயற்சிதான் இது. அப்படி இருந்தும், அசையாத உறுதி, விஞ்ஞான முன்னேற்றம், நவீனக் கருவிகள் இவற்றின் துணையோடு மிகச் சாதுரியமாக இந்த அறுவையைச் செய்கிறார்கள் மருத்துவ அறிஞர்கள்.

எகிப்தில் பிறந்து, பிரிட்டனில் நிலை கொண்டுள்ள மக்தியாகூப் என்ற மருத்துவ நிபுணர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். ஒரே மருத்துவமனையில் ஒருவர் இருதயத்தை எடுத்து இன்னொருவருக்கு வைப்பதில் மட்டுமல்லாது, தானம் செய்பவர் ஓரிடத்திலும், அந்த இதயத்தைப் பெறுபவர் இன்னொரு இடத்திலும் இருந்தாலும் கூட, அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்து கொண்டு அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக முடிக்கிறார் இவர்.

19 வயது டெப்பி லீனார்ட் பிறந்ததில் இருந்து இருதயநோயால் அவதிப்பட்டு வந்தாள்! இதயத்தில் ஒரு பொத்தல் இருந்ததால், நுரையீரலில் இரத்த ஓட்டம் மிகுந்து அது தடித்து விட்டது. இதனால் அவளால் ஒக்சிஜனைப் போதிய அளவில் காற்றில் இருந்து எடுத்துக் கொள்ள இயலவில்லை. மூச்சு முட்டியது! கொஞ்சத் தூரம் கூட மூச்சு வாங்காமல் அவளால் நடக்க முடியாது.

இவளுக்குத் தனது இருதயத்

## சாம, பேத, தான .....

(முற்பக்கத் தொடர்ச்சி)

விரட்டிவிட்டது. இவ்வாறு தண்டம்செய்து அதை ஓட்டியபின் அந்த யானை இறைச்சியைத் தனக்கே சொந்தமாக வைத்துக்கொண்டு நெடுநாள்வரை தின்று தன் பசியைத் தீர்த்துக் கொண்டது நரி.

சாமம்; பேதம்; தானம், தண்டம் ஆகிய நான்கு வழிகளாலும் அறிவுடையவர்கள் தங்கள் விருப்பத்தை முடித்துக்கொள்வார்கள்.

— 'புதுமுறை பஞ்சதந்திரக் கதைகள்' என்ற நூலில் இருந்து.

★

தையும் நுரையீரலையும் கொடுக்க முன் வந்தவர், 30 கிலோ மீற்றர் தொலைவில் இன்னொரு மருத்துவ மனையில் இருந்தார். அவரது இருதயத்தையும் நுரையீரலையும் எடுத்து, 12 நிமிடங்களில் ஹெலிக்கொப்டரில் பறந்து வந்து; 20 அறுவை மருத்துவர்கள் உதவியுடன் சில மணி நேரத்தில் பொருத்திவிட்டார். இப்பொழுது எல்லாம் இன்னொரு நாட்டில் இருந்து இன்னொருவரின் இருதயத்தையும் நுரையீரலையும் எடுத்து வந்து, மற்றொருவருக்கு பொருத்தி, யமனின் வாயிலில் இருந்து அவரைக் காப்பாற்ற இந்த மருத்துவ நிபுணர் மக்தி யாகூபால் முடிகிறது.

52 வயதாகும் மக்தியாகூப், 1980 இல் இருந்து 1987 டிசம்பர் வரை, பிரிட்டனில் உள்ள ஹேர்பீல்ட் மருத்துவமனையில் மட்டும் 460 மாற்று இருதய அறுவைகள் செய்திருக்கிறார். இவர்களில் 304 பேர் இன்னும் உயிர் வாழ்கின்றனர். ஆரம்பத்தில் ஹேர்பீல்ட் மருத்துவமனையில் 18மாதங்கள் ஒரு நோயாளி இந்தச் சிகிச்சைக்காகத் தங்கியிருக்க வேண்டும். இப்பொழுது எல்லாம் 18 நாட்கள் தங்கினாலே போதும்.
மக்தியாகூப் ஆண்டுக்குச் சுமார் 900 இருதய அறுவைகள் செய்கிறார். பல்வேறு மருத்துவ மனைகளில் இரவு பகல் என்று பார்ப்பதில்லை. ஒரு சமயம் ஒரு நாள் முழுக்க ஹேர்பீல்ட் மருத்துவமனையில் இருந்தார். பிறகு ஒரு இருதயம் பெற்று வர லண்டன் விரைந்தார். அதை இந்த மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து பொருத்தி முடிக்க நடுநிசியாகி விட்டது. அப்பொழுது, கிளாசஸ்டர்ஷயரில் இருதயம் தயாராக இருப்பதாகச் செய்தி கிடைத்தது. காரில் விமானதளம் போய் அங்கிருந்து அந்த மருத்துவ மனைக்கு விமானத்தில் பறந்து, அந்த இருதயத்தை இந்த மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து ஒரு நோயாளிக்குப் பொருத்தி முடிக்க; விடிந்து விட்டது. மறு நாள் காலையில் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட அறுவைகள் காத்து இருந்தன.

இப்படி இரவு பகல் உழைப்பதால், யாகூப் தன் குடும்பத்தைக் கவனிக்க முடிவதில்லை. ஒரு பையனும், இரண்டு பெண்களும், மனைவியும் இருக்கிறார்கள். இசை, தோட்டவேலை இவை இரண்டும் இவருக்குப் பிடிக்கும்.

வடக்கு எகிப்தில் பிறந்த யாகூப், இளமையில் இருந்தே தான் ஒரு சர்ஜனாக வரவேண்டும் என்று கனவு கண்டு வந்தார். செய்ரோ பல்கலைக் கழகத்தில் அவர் வாங்காத பரிசு இல்லை. லண்டன், கிளாக்ஸோ, எடின்பரோ பல்கலைக்கழகங்களில் மேல் படிப்பு முடித்தார். 1968 இல் ஹேர்பீல்ட் மருத்துவமனையில் சர்ஜனாகச் சேர்ந்தார்.

1972 இல் இவர் தன் முதலாவது மாற்று இருதய அறுவையைச் செய்தபோது. நோயாளி இறந்து விட்டார். ஆனால் யாகூப் அயராது உழைத்தார். 1980 இல் தனது முதலாவது வெற்றிகரமான மாற்று இருதய அறுவையைச் செய்தார். விடா முயற்சி, போராடும் குணம், தியாக உணர்வு இவற்றால், இன்று உலகின் தலை சிறந்த மாற்று இருதய அறுவை நிபுணராக விளங்குகிறார்.

— டாக்டர் முத்துக்காளத்தியின் ''அறுவியலின் அண்மைக் காலச் சாதனைகள்''— என்ற நூலில் இருந்து ★

## தமிழில் எழுதி வெளியிடப்பட்ட முதல் வரலாற்று நாவல்

# மோகனாங்கி

— பெ. கோ. சுந்தரராஜன் —

தமிழில் எழுதி வெளியிடப்பட்ட முதல் வரலாற்று நாவல் மோகனாங்கி. 1895-இல் வெளியான இந்த நாவல் கிபி 17ஆம் நூற்றாண்டில் திருச்சி, தஞ்சைப் பிரதேசங்களை ஆண்ட நாயக்கர் வம்சத்தைப் பற்றிய சம்பவம் ஒன்றைக் கதைப் பொருளாகக் கொண்டிருக்கிறது. இதை எழுதியவர் இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த சரவணமுத்துப் பிள்ளை.

இந்நாவலில் சமகாலச் சமூக நடப்பியலையும் வெறும் கற்பனையையும் தாண்டி, உண்மை வரலாற்றுச் சம்பவங்களைச் சரித்திர உணர்வுடன் ஆசிரியர் கூறியுள்ளார். பதினேழாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் திருச்சியிலிருந்து ஆட்சிபுரிந்தவர் சொக்கநாத நாயக்கர். அப்போது தஞ்சையிலிருந்து அரசாண்டவர் விஜயராகவ நாயக்கர். இவருடைய பெண் மோகனாங்கி மீது காதல் கொண்ட சொக்கநாத நாயக்கர் அவளை மணம்புரிய முயன்றதால் ஏற்பட்ட விளைவுகளை இந்நாவல் சித்தரிக்கிறது.

ஆசிரியர் சரவணமுத்துப் பிள்ளையின் வரலாற்று உணர்வு மிகவும் நுட்பமானது என்பதை நாவல் காட்டுகிறது. நாவலாசிரியர் சரவணமுத்துப் பிள்ளை தமது சரித்திர ஆராய்ச்சிகளில் கண்ட உண்மைச் சம்பவங்களில் கலையம்சத்துக்கு மாத்திரம் தேவையான கற்பனைகூட்டி, கதை புனைந்தார். இந்நாவலில் மோகனாங்கியைச் சொக்கநாதர் முன்பே சந்தித்ததாக வரும் சம்பவம் ஒன்று தான் கற்பனையென்று தெரிகிறது. மோகனாங்கி என்ற பாத்திரம் தான் பிற்காலத்தில் மதுரைக்கு வரலாற்றுப் பெருமை தேடித் தந்த அரசியான மங்கம்மாள். மோகனாங்கி, கோவிந்தாச்சாரி என்ற இரு பெயர்கள் மட்டுமே புனைபெயர்கள்: மற்றைய கதை மாந்தர்கள் எல்லாரும் சரித்திரத்திலுள்ளவாறே உண்மைப் பெயரோடு உலாவுகிறார்கள்.

சரவணமுத்துப் பிள்ளை சென்னையில் பிரஸிடென்ஸி காலேஜில் (இன்றைய மாநிலக் கல்லூரி) நூலகராகப் பணியாற்றியவர். அன்று இந்த நூலகம் கீழ்த்திசை சுவடிகள் களஞ்சியம் என்ற பெயரில் இயங்கியது. வரலாற்று ஆதார ஆவணங்கள் நிறைந்த இந்த நூலகத்தில் சரவணமுத்துப் பிள்ளைக்குத் தஞ்சை நாயக்கர் ஆட்சி பற்றிய உண்மைச் செய்தி

கள் பல கிடைத்தன. அவருடைய கற்பனைக்கு இந்தச் செய்திகள் வரலாற்று வண்ணம் கொடுத்து உதவ, இந்த ரசமான கதையை முதல் வரலாற்று நாவலாக எழுதினார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்த்துறையில் மிக்க செல்வாக்கு அடைந்திருந்த சேலம் பகடால நரசிம்மலுநாயுடு முதன் முதலில் தமிழில் பிரயாணக்கட்டுரைகளும், நூல்களும் எழுதியவர்.

வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்த இந்த அறிஞர் தக்ஷிண இந்திய சரித்திரம் என்ற இரண்டு பாகங்கள் கொண்ட நூலும் எழுதியிருக்கிறார்,

இந்த நூலில் தஞ்சை நாயக்கர் ஆட்சிபற்றிய வரலாற்றை விவரிக்கும் போது சரவணமுத்துப் பிள்ளையின் மோகனாங்கி நாவலை மேற்கோள் காட்டுகிறார் என்பது இந்த நாவலின் தனிச்சிறப்புக்குச் சான்றாகும்.

நன்றி:- ''தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்''

## மனிதன் எண்ணுவது

பிறப்பு ஒருவனைத் தூண்டும்போது வாழவேண்டும்
என்று எண்ணுகிறான்
பருவம் ஒருவனைத் தூண்டும்போது அனுபவிக்க
வேண்டும் என்று எண்ணுகிறான்
அரசியல் ஒருவனைத் தூண்டும்போது உரிமை வேண்டும்
என்று எண்ணுகிறான்
அடிமைத்தனம் ஒருவனைத் தூண்டும்போது விடுதலை
வேண்டும் என்று எண்ணுகிறான்
சாவு ஒருவனைத் தூண்டும்போது பரம்பொருள்
வேண்டும் என்று எண்ணுகிறான்.

## நிலாத் தாகம்

தாரகைக் கூட்டத்துள் தள்ளாடும் தண்ணிலவே
நான் என்ற எண்ணமா உனக்கு!
மான் என்று துள்ளித் திரியும் வெண்ணிலவே – புள்ளி
உனக்கு ஏன் என்று கேட்க எவரும் இல்லை என்ற எண்ணமோ?

வானின்று நீ உதிக்கும் வண்ணஒளியை - இன்று
வீண் என்று எண்ணுகின்றார் சிலர் போலும் – இங்கு
தேன் என்ற நிலாவைக் களிக்க வா என்று அழைக்கின்றேன்
வானின்று இறங்கி வாராயோ என் வெண்ணிலவே!

ஆற்றங் கரையினிலே அழகான மணல் பரப்பில் காத்திருந்தேன்
– உனக்காக
நேற்றிருந்த நிலாகூட வீற்றிருக்கவில்லை அந்த வெளியிலே
காத்திருந்த போதிலும் காணவில்லை உன் வரவை - ஏன்
நான் என்ற எண்ணமா உனக்கு?

சந்தனம் குங்குமம் பூசி அந்தணனாக நான் வருவேன்
சந்திரனே உன் வருகை தாமதித்தால்
மந்திரம் கூறி உனைவரவழைக்க நான் என்றும் வஞ்சகன்அல்ல
என் தந்திரத்தால் உனை நான் வரவழைப்பேன்!

நிலாவே சோற்றுடன் உலாப்போனேன் உன்வரவை எதிர்பார்த்து
விழாக்காண அங்கு விண்மீன்களே விழித்து நின்றன
கனாக்கண்ட காட்சிபோல அங்கு விழாக்காணவில்லையே
ஏன் நான் என்ற எண்ணமா உனக்கு வெண்ணிலவே?

மலையிடை வரும் மதியே உன்குறுநடை எங்கே?
இருளிடை வரும் ஒளியே உன் வரவெங்கே? - ஏன்
தரவு பல தந்து விட்டு உன் வரவில் தாமதம் ஏன்?
கனவு பல காணவேண்டும் என்ற எண்ணமா உனக்கு நான்

மேதினியில் இருக்கும் மாந்தருக்கு – இன்று
வானுறையில் இருக்கும் உன் ஒளிதான் கிட்டாதோ
பொய்கையிலே உன் ஒளிபட பொற்குளமே உருவாகுதங்கு
செய்கையினால் ஏன் என்னை கொல்லுகின்றாய் வெண்ணிலவே –உன்

மண்ணுலகில் உன் ஒளியைக்காண மாந்தர்களோ ஒருகோடி -இன்று
தண் ஒளியை தானம் செய்ய உனக்கு ஒரு கேலி
உன் ஒளியை எதிர் பார்க்கும் நானோ ஒரு பேடி
தண் நிலவே வாராயே! என் தாகம் தனை தீர்க்க!

இ. டி. வசந்தகுமார்,
தள வைத்தியசாலை,
திருமலை.

## கவிதைபாட நேரம் உண்டோ?

ஒப்படைகள் பூதமாகி நேரத்தை விழுங்கும்வேளை
முப்படைகள் மோதிமோதி நிம்மதியை குலைக்கும் காலை
விலைவாசி ஏறி ஏறி வருவாயை விரட்டும் வேளை
கற்பனையை பறக்கவிட்டு கவிதைபாட நேரமுண்டோ?

காலையிலே எழுந்துவிட்டால் காலைக்கடன்
கடன்தீர்த்து முடித்துவிட்டால் பாடசாலை
பாடம் முடிந்து படைஎடுக்கும் வீட்டுவேளை-சாமம்வரை
பின் நித்திரையை துரத்திவிட்டு கவிதைபாட நேரமுண்டோ?

நாள் ஒன்றிலிருப்பது நாலாறு மணித்தியாலம்
நாள் ஒன்றில் நினைப்பதோஆராயிரம் அலுவல்கள்
நான் என்ன குளக்கோட்டன் பூதமா முடிப்பதற்கு
வேலைகளை தட்டித் தட்டி கவிதைபாட நேரமுண்டோ?

வெப்பத்தால் கிணற்று நீர் வற்றுங் காலம்
வீசுகின்ற பேய்க்காற்று வறட்டும் காலம்
குடிக்கின்ற பாலுக்கும் கோமாரித் தடைக்காலம்
தொண்டை நீரை வற்றவிட்டு கவிதைபாட நேரமுண்டோ?

விஞ்ஞான விளைச்சல்கள் உலகை நிரப்ப
மெய் ஞான லயத்திற்கு உள்ளம் தவிக்க
டீவியும் வீடியோவும் பராக்குக் காட்ட அதில்
இருந்து தப்பி வந்து கவிதைபாட நேரமுண்டோ?

சங்கம்வைத்து கவி சமைத்தார் முன்னை வேந்தர்
வக்கிலா கவிஞனுக்கு கவி கொடுத்தார் சொக்கநாதர்
நான் வேந்தனில்லை பக்தனில்லை மன்னிக்க வேண்டும்
நேரமில்லா நேரத்தில் கவிதைபாட நேரமுண்டோ?

ஓடுகின்ற நேரத்தை நொண்டியாக்கி
பாடுகின்ற திறமைக்குள் மனத்தை தள்ளி
தேடுகின்ற சித்தனில்லை சிறுமி நான்
ஒருமாத தவணைக்குள் கவிதைபாட நேரமுண்டோ?

அன்ன நடை நடந்து காகம் தன் நடை மறந்ததென்பர்
மயிலாட அதுகண்டு வான்கோழி தானுடிற்றென்பர்
கவிஞானம் சற்றுமிலா சிறுமி நான் செருக்கறியேன்.
குயில்பாட கேட்கிறேன் கவிதைபாட நேரமுண்டோ?

பா. பகீரதி
10ஆம் ஆண்டு
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்,
திருகோணமலை.

## நம்பிஞல் நம்புங்கள்!

நீங்கள் உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கும் சில விடயங்கள் உண்மையில் பொய்யானவை என்று உங்களுக்குத் தெரியுமா?

மாதிரிக்கு இதோ சில:-

★ காட்டின் அரசன் சிங்கமா? இல்லவே இல்லை. ஏனென்ருல் சிங்கம் காட்டில் வாழ்வதே இல்லை. அடர்ந்த புல் வெளிகளில் தான் சிங்கம் வாழும். காட்டில் வசிக்காத சிங்கத்தை காட்டின் அரசன் என்றுகூறலாமா?

★ இருட்டில் பூனைகளுக்கு கண் தெரியும் என்பது தவறு. முழு இருட்டில் எந்த விலங்குகளுக்கும் கண் தெரியாது. ஆனுல் ஒரு போட்டோ கிராபரின் இருட்டறையில் உங்களை விட பூனைக்கு நன்கு கண் தெரியும் என்பது உண்மை தான்.

★ தீக்கோழியை முட்டாள் பறவை என்பார்கள். தன்னுடைய தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டால் தன்னை யாரும் பார்க்க முடியாது என அது எண்ணுகின்றதாம். அதனுல் முட்டாள் பறவை என நாம் நினைக்கிருேம். உண்மையில் நாங்கள் தான் முட்டாள்கள். ஏன் தெரியுமா? தீக்கோழி புத்திசாலிப் பறவை என்பது தான் உண்மை.

அது தன்னுடைய உடம்பை வளைத்து முகத்தை நிலத்தில் புதைத்துக் கொண்டிருப்பதைத் தூரத்தில் இருந்து யாராவது பார்த்தால் அதனை யாரும் தீக்கோழி என்று கூறிவிட மாட்டார்கள். ஐதான சாம்பல் இறகுகளினுல் மூடப்பட்ட அதன் உடல், ஒரு பற்றைபோல காட்சி தரும். இதனுல் எதிரிகளின் கண்களிலிருந்து சுகமாகத் தப்பி விடுகிறது அப்பறவை. இந்தத் தந்திரத்தைப் பாவிப்பதால் உண்மையில் தீக்கோழி ஒரு புத்திசாலிப் பறவை தான்.

சில சமயங்களில் வரண்ட பிரதேசத்தில் நீர் தேடி, மண்ணைத் துளாவி, மண்ணுக்குள் தலையை வைத்து இப் பறவை நோட்டம் விடுவது உண்டு. ஆனுல் அது முட்டாள் தனம் அல்ல.

★ ஜூலியஸ்ஸீஸர் ரோமபுரியின் சக்கரவர்த்தி என்பது உண்மையா ?

இல்லை. ஸீஸரின் காலத்தில் ரோமில் நடைபெற்றது. குடியரசு ஆட்சி முறை தான்; முடியாட்சி அல்ல. ஆகவே ஜூலியஸீசர் எப்போதும் ரோமாபுரியின் மன்னஞக முடி சூட்

டப்படவில்லை. ஸீஸர் கொலை செய்யப்பட்டு 17 ஆண்டுகளின் பின்னர் தான் ரோம சாம்ராஜ்யம் நிறுவப்பட்டது. ஸீஸரின் பேரன் வழி மருமகன் அகஸ்டஸ் தான் ரோம சாம்ராஜ்யத்தின் முதலாவது மன்னனாக முடி சூட்டப்பட்டான்.

★ தொலை நோக்குக் கண்ணாடியை (டெலஸ்கோப்பை) கண்டு பிடித்தவர் கலிலியோ என்பதுதவறு. தொலை நோக்கியைப்பாவித்து வானவெளி பற்றிய ஆய்வை மேற்கொண்ட முதல்நபர் கலிலியோ என்பது உண்மை. ஆனால் அவர் தமக்கு என ஒரு தொலை நோக்கியை அமைப்பதற்கு ஓராண்டு முன்பாகவே –1608 இலேயே –ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்த விஞ்ஞானி லிப்பர்ஷி தொலை நோக்கி ஒன்றைத் தயாரித்து விட்டார்.

★ நாம் பாவிக்கும் அரபிய இலக்கங்கள் அராபியர் கண்டுபிடித்தவை அல்ல. கிறிஸ்துவுக்கு முன் 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்துக்களின் எழுத்து வடிவங்களிலேயே இந்த இலக்கங்கள் காணப்படுகின்றன. அராபிய வர்த்தகர்களும் அறிஞர்களும் இதனைப் படித்து அறிந்த பின் – சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்-ஐரோப்பாவில் அதனை அறிமுகம் செய்தனர். அவ்வளவே!

★ உலகில் உயரமான மலை எவரெஸ்ட் என்பது உண்மையா? உங்கள் பதிலுக்கு இதோ சில தகவல்கள்.

எவரெஸ்டின் உயரம் 8 ஆயிரத்து 848 மீற்றர்தான். ஆனால் ஹவாய்த்தீவில் உள்ள கௌனுகீ மலை கடல் மட்டத்திற்கு மேல் 4ஆயிரத்து 201 மீற்றரும் கீழ் 4 ஆயிரத்து 877 மீற்றரும் உயரமுடையது. அதாவது மொத்தம் 9ஆயிரத்து 78 மீற்றர் உயரம். இது எவரெஸ்டின் உயரத்தை விட 230 மீற்றர்கள் அதிகம்.

★

தொகுப்பு :-

அறிவுநாயகன்

★★

★

# இந்துக்களின் சிந்தனைக்கு!

குலம், கோத்திரம், ஜாதி, தீண்டாமை, மததத்துவக் கொள்கைகள், குருபாரம்பரிய பேதங்கள், வழிபாட்டு முறைகள் போன்றவைகளிலிருந்து எழுந்த பிணக்கும் போராட்டமும் தான் இந்துக்களுடைய ஐக்கியத்தைச் சீர்குலைத்து வந்திருக்கின்றது.

இந்தப் பலவீனங்களை அன்னியர் தங்கள் சுயநலத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள் என்பது தான் உண்மை. நமது ஐக்கிய சக்தியைப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கும் உயர்வு தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் அறவே ஒழிக்க வேண்டும்.

இந்து ஆலயங்கள் இந்து சமுதாயத்தின் நடுநாடியாகவே இருந்து வந்திருக்கின்றன. இதன் கர்ப்பக்கிரகத்தில் இருந்து ஒழுகிவரும் பிராண சக்தி சமுதாயத்தின் நாடித் துடிப்பைச் சீராக்குகிறது சேத்திரச் சைத்தன்னியம் இருந்திருக்காவிட்டால் இந்துமதம் வரண்ட பாலைவனம் போன்று சூனிய நிலையை அடைந்திருக்கும்.

வர்ண பேதங்களும், முரண்பாடுகளும், சம்பிரதாய பேதங்களுமுடைய இந்துக்களெல்லாம் ஆலயத்தின் ஏக சைதன்ய சக்தியில் ஐக்கியப்படுகின்றனர். வெவ்வேறு திசையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்துக்களுடைய நாடி நரம்புகளை ஒன்றிணைத்துச் சமுதாயத்தின் இரத்தாசயங்களை ஆலயங்கள் சுத்திகரித்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய மகாமகிமை பொருந்திய ஆலயங்களில் கர்மங்களும், வாக முறைகளும் எவ்வளவு தூரம் இலட்சிய சுத்தியோடும், ஆத்மார்த்தத்தோடும் நடைபெறுகின்றதென்பது இன்று ஒரு விமர்சன விடயமாக இருக்கின்றது.

ஆலயங்களில் பிராண நாடிகளைப் பாதிக்கக் கூடிய இவ்விஷயத்தில் கண்மூடி மௌனிகளாயிருப்பதும், அல்லது தெளிவும் சக்தியுமில்லாத அபிப்பிராயங்களை வைத்துக் கொண்டிருப்பதும் எதிர்காலத் தலைமுறைகள் அவிசுவாசிகளாக மாறுவதற்குக் காரணமாகிவிடும்.

ஆலயம் என்ற நடு நாடியின் இருமருங்கிலும் இயங்கிக்கொண்டிருக்கும் இடகலை, பிங்கலை போன்ற பெரும் சுவாசக் கலைகளாகிய ஆலய குருமார்களும் தர்மகர்த்தாக்களும் தான் ஆலயச் சுடரொளியைத் தூண்டிவிடும் தூண்டுகோல்களாவர்.

இவர்கள் போதிய இலட்சிய சுத்தியோடும் ஆத்மார்த்தத்தோடும் ஈஸ்வரார்ப்பண புத்தியோடும் ஆலய கைங்கரியங்களை நிர்வகிக்கத் தவறும் பட்சத்தில் சேத்திரங்கள் விரைவில் இரவுச் சந்தைகளாக மாறிவிடும்.

பரவலாகக் காணப்படும் சீர்கேடுகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பதற்கு ஆலய பக்தர்கள் சிரத்தை எடுக்க வேண்டும். தவறினால் வளர்ந்து வரும் நமது பசுமை நிறைந்த இளம் உள்ளங்களில் மதத்தைப் பற்றிய தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டு அவர்கள் சூனிய வாதிகளாக மாறிவிடுவர்.

பக்தர்களுடைய பக்தி விசுவாசங்களை தவறான வழியில் சுரண்டி எடுத்து ஆலயங்களை வளர்க்கப் பார்ப்பது ஆலயங்களுக்கும் மதத்துக்கும் பெருங்களங்கத்தை ஏற்படுத்துவதாயிருக்கும்.

இந்து மதத்தை எதிர்நோக்கியிருக்கும் இன்னொரு அபாயமும் இருக்கின்றது.

பெரும்பாலான இந்துக்கள் கிராமப்புறங்களில் தான் வாழ்கின்றனர். அவர்கள் அஞ்ஞானத்தாலும், வறுமையாலும் மதரீதியான ஐக்கியத்தை இழந்து கூறு கூறாகப்பிரிந்து கொண்டிருக்கின்றனர். உதிர்ந்து விடும் இத்துண்டுகளைக் கொத்தித் தின்னக் கூடிய கழுகுகள் ஏற்கனவே ஆங்காங்கு கூடுகட்டி வாழ்ந்து வருவதையும் அறிந்திருக்க வேண்டும்.

நகரமத்தியில் வசதியான நாற்காலிகளில் மாத்திரம் உட்கார்ந்து கொண்டிருக்கும் நமது மத தத்துவ சம்வரிதைகளும், புகழ்பெற்ற மத இயக்கங்களும் ஆதரவற்று ஒளியிழந்து வரும் கிராம இந்துக்கள் மத்தியில் ஒரு கை விளக்கையாவது கொழுத்தி வைக்க முயற்சி செய்தால் இருளடைந்த அவர்களது வாழ்விலும் ஒரு விடிவெள்ளி உதிக்கலாமல்லவா?

தனி நபர்களை மாத்திரம் மோட்சத்திற்கு அனுப்பி வைக்க முயற்சிக்கின்றவர்கள் சமுதாய மோட்சத்திலும் ஒரு சிறு கண்பார்வை செலுத்தினால் சமுதாயம் மோட்சத்திற்கு அருகதை உடையதாய் தீரும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்துக்களுடைய எண்ணிக்கை கணிசமான அளவுக்கு குறைந்திருக்கின்றது என்பது ஆழமாகச் சிந்திக்க வேண்டிய விஷயம்.

இந்துகளுக்கு உரியதாக விருக்கின்ற எதையையும் நிந்தனைக் கண் கொண்டு பார்க்கின்ற நவீன பகுத்தறிவாளர்கள், விஞ்ஞான மண்டலத்தில் நிமிஷம் தோறும் மாறிக் கொண்டிருக்கும் மாற்றங்களை அறியத் தவறி விடுகின்றனர்.

19 ஆம் நூற்றாண்டின் ஏட்டுப் பிரதிகளாயிருக்கின்ற இவர்கள், இருபதாம் நூற்றாண்டின் நவீன விஞ்ஞான கூட்டங்களில் இந்து மத வேதாந்த கூற்றுக்களை சாஸ்திர ரீதியாக நிரூபிக்கப்படுகின்றன என்பதை அறிய வேண்டும்.

இங்ஙனம் நவீன விஞ்ஞான சித்தாந்தங்கள் வேதாந்த கூற்றுக்களை நோக்கிப் பரிணமித்து வருகின்ற இவ்வேளையில், விஞ்ஞான அறிவில் அரிச்சுவடி பாடத்தில் இருக்கின்ற நம்மவர்களில் பலர் மத யதார்த்தங்களில் கண்மூடிகளாக இருப்பது முழுமுட்டாள்தனமாகும்.

மத ஞானமில்லாத பௌதீக சாஸ்திரமும், பௌதீக சாஸ்திரமில்லாத மத ஞானமும் மனித சமுதாயத்தின் சரியான வளர்ச்சிக்கு உதவுவதாயிருப்பதில்லை. ஆகையால் எதிர்கால உலகம் ஞான, விஞ்ஞான யோகத்திலிருந்து உடலெடுத்த பழைமையும் புதுமையுங் கலந்த ஒரு நவீன உலகமாயிருக்கும்.

இதன் அறிகுறியாக பௌதீக சுபீட்சம் நிறைந்த மேல் நாடுகளிலிருந்து தங்களுடைய கலை, கலாசாரங்களைப் புறக்கணித்து இந்து ஆத்மீகக் குருமார்களை நாடி வந்து குவியும் மேல்நாட்டு இளைஞர்களைப் பார்த்தால் இதன் தாற்பரியங்களை நீங்கள் ஊகித்தறியலாம்.

**(சுவாமி கெங்காதரானந்தாவால் எழுதப்பட்ட 'இந்து' என்ற கட்டுரையின் ஒரு பகுதி — 'ஞானமண்டலம்' கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டுள்ளது.)**

★

# 'தியானம்' பற்றி பாரதியார்



தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம். மனிதன் தான் விரும்புகிறபடியே ஆகிறான். இதைக்காரணங்கள் காட்டி ருசுப்படுத்த வேண்டுமானால், அது ஒரு பத்திரிகைக் குறிப்பின் அளவுக்குள் முடிவு பெற மாட்டாது. ஆனால், அனுபவத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

ஒருவனின் மனதில் நிமிஷத்திற்கு நிமிஷம் தோன்றி மறையும் தோற்றங்களெல்லாம் தியானமாக மாட்டா.

புதர்க் கூட்டத்திலே தீப்பிடித்தாற்போல மனத்திலுள்ள மற்றக் கவலைகளையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே ஜோதியாக விளங்கும் பெரிய விருப்பத்தைத் தியானம் என்று கூறுகிறோம். உள்ளத்தில் இவ்வித அக்னி ஒன்றை வைத்துக் கொண்டிருப்போமானால், உலகத்துக் காரியாதிகளெல்லாம் நமது உள்ள நிலைக்கு இணங்கியவாறே மாறுபடுத்தலாம்

சுவாமிகள் ஆத்மநாசத்திற்கு இடமான ஒருவகை இன்பத்தையே தியானமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள மெய்யான இன்பத்தையெல்லாம் நுகர்ந்து, தமக்கும், பிறர்க்கும் நிலைத்த பயன்கள் விளைவதற்குரிய நற்காரியங்கள் செய்து, உள்ளத்திலுள்ள குழப்பங்களும் துன்பங்களும் நீங்கி, சந்தோஷமும் புகழும் பெற வேண்டுமென்ற இச்சை உடையவர்கள் தமது இச்சையை நிறைவேற்றிக் கொள்வது அசாத்தியமன்று. அது இவ்வுலகத்திலேயே இந்த ஜென்மத்திலேயே சாத்தியமாகும்.

அஃதெப்படி என்றால், தமது உள்ளத்திலே தீரத்தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை, இந்த எண்ணங்களையே நிரப்ப வேண்டும்.

'இவற்றையெல்லாம் நான் எனது உடைமையாக்கிக் கொள்வேன். இவற்றுக்கு எதிர்மறையான சிந்தனைகள் எனது அறிவினுள்ளே நுழைய இடங்கொடுக்கமாட்டேன்' என்று ஒவ்வொருவனும் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

'தனது உள்ளத்தில் இன்ன இன்ன எண்ணங்களைத் தான் வளர விட வேண்டும்: இன்ன இன்ன எண்ணங்களை வளரவிடக் கூடாது என்று நிச்சயிக்கும் அதிகாரம், திறமை, ஒவ்வொருவனுக்கும் இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கின்றது. இதை அநுபவத்திற்குக் கொண்டுவரும்போது ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் உண்டாகும். உன்னை எதிர்த்துச் சில விகாரமான சிந்தனைகள் அறிவிற்குள் வந்து நுழைந்து கொண்டு, வெளியே பிடித்துத் தள்ளினாலும் போக மாட்டோம், என்று பிடிவாதஞ்செய்யும் அங்ஙனம் சிறுமைக்கு உரிய எண்ணங்கள் உன் அறிவில் புகுந்து கொண்டு தொல்லைப் படுத்துமானால், நீ அவற்றை வெளியே தள்ளுவதில் நேராக வேலை செய்ய வேண்டாம். நீ அதைத்தள்ள தள்ள, அது அங்கே தான் இருக்கும்.

அதற்கு யுக்தி வேறு.

நீ அந்த எண்ணத்திற்கு நேர் மாறான வேறொரு நல்ல சிந்தனையில் அறிவு செலுத்து. அப்போது அந்த நல்ல சிந்தனை வந்து அறிவில் இருந்துகொள்ளும். உன்னைத் தொல்லைப் படுத்திய குட்டிச்சாத்தான் தானாகவே ஓடிப்போய் விடும்.

தெய்வ பக்தி உள்ளவர்களாயினும், நாஸ்திகர்களாயினும், மார்க்கஸ்தர்களாக இருந்தாலும், ஒரு மார்க்கத்தையும் சேராதவர்களாக இருந்தாலும் தியானம் அவசியம்.

பாரததேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது நல்ல தியானமாகும்.

சோற்றை விட்டாலும் விடு. ஒரு தனி இடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக் கூடிய சிந்தனைகள், பலம் தரக் கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் - இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒருநாளேனும் தவற விடாதே. தெய்வ பக்தி உடையவர்கள் இஷ்ட தெய்வத்தை அறிவில் நிறுத்தி, அதனிடம் மிகுந்த தாகத்துடனும் உண்மையுடனும் மேற் கூறியவாறு பெருமைகள் உண்டாக்குமாறு பிராத்தனை செய்ய வேண்டும்.

வாயினால் பழங்கதை ஒன்றை முணுமுணுப்பது அதிகப் பயன் தரமாட்டாது உன்னுடைய உள்ளுயிரிலிருந்து அந்தப் பிரார்த்தனை வெளியேற வெண்டும். நீயாக உனது சொந்தக் கருத்துடன் சொந்த வசனங்களில் உயிர் கலந்து தியானம் செய்வதே பயன்படும்.

நாஸ்திகர் கூட இஷ்டதெய்வம் இல்லாவிட்டாலும் வெறுமே தியானம் செய்வது நன்று ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்பது குறள்.

பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம்கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல், உனக்குள்ளிருந்து தெரிந்த அறிவும், தீரத்தன்மையும், சக்தியும் மேன்மேலும் பொங்கிவரும். உன் இஷ்டசித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம்: அனுபவத்தில் பார்.

(''தத்துவம்'' - அமரகவி பாரதியார் கட்டுரைகள் புத்தகத்தில் இருந்து.)

## 'அறிவு' உரை தரும் சொற்கள்

இருபதாம் நூற்றுண்டில்வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு ஒரே ஒரு சொல்லின் மூலம் தரக்கூடிய சிறந்த அறிவுரை என்ன?'' – இப்படி பலரைப் பார்த்துக் கேட்டார் ஓர் அறிஞர்.

இக்கேள்விக்கு பலர் தந்த பதில்கள் பலவற்றில் மூன்று சொற்கள் அனேகமாக இடம்பெற்றிருந்தன

முதலாவது சொல் – ''வாழ்''. 'சீவித்தல்', 'அனுபவி', 'வளர்' 'விழித்திரு' எனப் பலபொருளை தருவது இச்சொல்.

இரண்டாவது சொல்– ''அன்பு'' இது 'நேசி' 'அன்புசெலுத்து', காதலி', 'கருணைகாட்டு' எனப் பொருள் தருகிறது.

அடுத்த சொல் – ''கல்''. இது 'கற்றல்', 'பழகு', 'பயிற்சிசெய்' 'அறிதல்' எனப் பலபொருள் தருகிறது.

அனேகமானோர் கூறிய பதில்களை அலசிப் பார்த்தால் இந்த மூன்று சொற்களுக்கு மேலாக கிடைத்த நான்கு சொற்களும் வருமாறு:-

''சிந்தி''- சிந்தனைசெய், யோசி.
''கொடு''- ஈதல், கொடுத்தல்.
''சிரி''- சிரித்தல், நகைத்தல், மகிழ்சியாய் இருத்தல்
''முயற்சித்தல்''- முன்னேறுதல்

இந்த ஏழு சொற்களையும் அறிவுரையாக இம்முறை ''அறிவு'' உரை செய்கிறது.

வாழ்; நேசி; அறி; சிந்தி; கொடு மகிழ்; முன்னேறு!

## கர்ணன் இழந்த சந்தர்ப்பம்

மாதா, பிதா, குரு, தெய்வம் ............

இந்த நால்வரின் ஆசியும் இருந்தால் தான் ஒருவன் வாழ்க்கையில் முன்னேற முடியும். குறைந்தது இந்த நால்வரில் ஒருவராவது உதவி செய்ய வேண்டும். ஆனால் இந்த நால்வராலும் வஞ்சிக்கப்பட்ட பாத்திரம் கர்ணனே!

தாயாகிய குந்தி திருமணமாகும் முன்னரே கர்ணனைப் பெற்றதால் அவனை ஆற்றில் விட்டுவிட்டாள்.

தந்தையாகிய சூரியபகவானோ பிறப்பதற்கு மட்டும் காரணமாக விருந்தாரே ஒழிய, கர்ணனை வளர்க்கவோ அவனிடம் அன்பு செலுத்தவோ இல்லை.

குருவாகிய பரசுராமரோ, அவன் பொய் கூறி வில் வித்தை கற்றதால் 'கற்ற வித்தை காலத்தில் உதவாது' என்று சாபமிட்டு விட்டார்.

தெய்வமாகிய கண்ணனும் பாண்டவர் பக்கம்.

ஆக கர்ணனுக்கு வாழ்க்கையில் வெற்றிபெற 'சான்ஸே' இல்லாமல் போய் விட்டது. ★


நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

உங்கள் முதலீடுகளுக்கு அதி உயர் வட்டிபெற நம்பிக்கையுடன் நாடுங்கள்


ஷப்ரா

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன் அவனே!

SHABRA
UNICO FINANCE LIMITED,

207, Power House Road, Jaffna,
61, New Bullers Road, Colombo 4
TEL:- 500576, 589310

## கோணேசர் ஆலயத் தோற்றம்



தாயினும் நல்ல தலைவரென்று அடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்திலும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

இச் சஞ்சிகை 29, சிவன் வீதி திருகோணமலையில் இருக்கும் ஞானம்பிகை ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் உதயன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.